மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 294, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

294–

காரைக்குடியில் கண்ணதாசன் மணிமண்டபத்தில் அவரது திருவுருவச் சிலை அமைத்தல்

35206–திரு. ஓ. எஸ். அமர்நாத்:

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காரைக்குடியில் உள்ள கண்ணதாசன் மணிமண்டபத்தில் அவருடைய திருவுருவச் சிலையை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கவியரசு கண்ணதாசனின் மார்பளவு வெண்கலச்சிலை ரூ. 23,500 செலவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. காரைக்குடியில் உள்ள கவியரசு கண்ணதாசன் மணிமண்டபத்தில் விரைவில் அவரது சிலை நிறுவப்படும்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தமிழ் அறிஞர்களுக்கும், கவிஞர்களுக்கும் கௌரவமும், மரியாதையும் செய்கின்றவகையிலே பசும்பொன் மாவட்டத்திலே பிறந்து வளர்ந்து, தமிழ்க் கலைஞர்களுக்கும், தமிழ்த் திரைப்பட உலகத்திற்கும் ஒரு சிம்மசொப்பனமாக விளங்கி, பாடல்களிலே தனக்கு என்று ஒரு தனி முத்திரையைப் பதித்துக் காட்டிய கண்ணதாசனுடைய திருவுருவச் சிலையை அமைப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த நேரத்திலே, தமிழ்த் திரைப்பட உலகத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் நடித்த பல திரைப்படங்களிலே, பல பாடல்களை எழுதி, கொள்கைப் பாடல்களை எழுதி, மக்களுக்கு உதவி செய்த கவிஞர் கண்ணதாசன், 'சத்தியம் நீயே, தர்மத்தாயே குழந்தை வடிவே தெய்வ மகளே, குங்குமக் கலையோடு குலம் காக்கும் பெண்ணே, குணத்தில் பசு என்று சொல்வார்கள் கண்ணே, காலையிலே உன் முகம் பார்த்த பின்னே, தன் கடமை செய்வாள் எங்கள் தமிழ்நாட்டுப் பெண்ணே' என்று....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அமர்நாத், அவருடைய பாடல் பூராவும் பாடினால், இந்த அவையிலே அதற்குத் தனியாக நேரம் ஒதுக்க வேண்டியிருக்கும். நீங்கள் அந்தக் கருத்தை மட்டும் சொன்னால் போதும்.

1994 ஏப்ரல் 18]

திரு. ஓ. எஸ். அமர்நாத்: காலையிலே புரட்சித் தலைவர் முகம் பார்த்த பின்னே, தம் கடமை செய்வாள் எங்கள் தமிழ்நாட்டுப் புரட்சித் தலைவி என்று சொல்லி, இன்றைக்கு எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும், புரட்சித் தலைவர் திருவுருவத்தைப் பார்த்த பின்பு அத்தனை பிரச்சினைகளையும் தீர்க்கின்ற வகையிலே ஆட்சி செய்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி, எத்தனை சோதனைகள் வந்தாலும், அந்தச் சோதனைகள் எல்லாம், 'தர்மம் தலை காக்கும்; தக்க சமயத்தில் உயிர் காக்கும்; கூடயிருந்தே குழி பறித்தாலும், கொடுத்தது காத்து நிற்கும்; மலை போலே வரும் சோதனை யாவும் பனி போல் நீங்கிவிடும்; நம்மை வாழவிடாதவர் வந்து நம் வாசலில் வணங்கிட வைத்து விடும்' என்று நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுக்கு எத்தனையோ சோதனைகள் வந்த காலத்திலும்கூட, புரட்சித் தலைவியினுடைய அரசியல் எதிரிகள் அவருடைய காலில் விழும் நேரம்தான் இன்றைக்குத் தமிழகத்தில் அரசியல் நேரமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, கவிஞர் கண்ணதாசனுடைய மணிமண்டபத்தில் அவர் திருவுருவச் சிலையை அமைத்துக் கொடுப்பதாகச் சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்; நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி கற்பகம் இளங்கோ.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் உலகில் கவிதைக் களஞ்சியமாகத் திகழ்ந்த மாபெரும் கவியரசு கண்ணதாசன் எனது காரைக்குடி நகரத்திற்குப் பக்கத்தில் இருக்கின்ற சிறிய கிராமத்தில், சிறுகூடல்பட்டியில் பிறந்தவர். அப்பேற்பட்ட மாபெரும் கவிஞராக விளங்கிய அவர், உடல் அளவில் மறைந்தாலும், உள்ளத்தளவில் அனைவரின் நெஞ்சங்களிலும் நீங்காது நிறைந்த அந்த மாபெரும் கவியரசுக்கு எங்களது நீண்ட நாள் கோரிக்கையான கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்தும், 25 இலட்சம் ரூபாய்தான் முதலில் மதிப்பீடு செய்திருந்தார்கள். இப்பொழுது 55 இலட்சம் ரூபாயை அள்ளிக் கொடுத்து தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் அருமையான மணிமண்டபத்தை எழுப்பியுள்ளார்கள். அடுத்த எங்களது நீண்டநாள் கோரிக்கையான அவருடைய திருவுருவச் சிலை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்திருக்கிறார்கள். இதற்கு எனது தொகுதி மக்களின் சார்பில் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கவியரசு கண்ணதாசன் பெயரால் அமைந்திருக்கும், நற்பணி மன்றத்தினர்,

அனைத்து நிகழ்ச்சிகளையும் அந்த மணிமண்டபத்திலேயே அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில்தான் அது அமைக்கப்பட்டது. ஆனால் அங்கு அதிகமாக எதிரொலி இருப்பதால் அங்கே நிகழ்ச்சிகளை நடத்தாமல் பல்வேறு கல்யாண மண்டபங்களில்தான் நிகழ்ச்சிகளை நடத்தும் சூழ்நிலை உள்ளது. எனவே மிக விரைவில் அந்த எதிரொலியை நீக்கித் தருவதற்கும், அங்கேயுள்ள இருக்கை வசதிகளை அதிகரித்துத் தருவதற்கும் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், யாரும் கோரிக்கை வைக்காமலே, கவிதை உலகில் முத்திரை பதித்த பத்தரைமாற்றுத் தங்கம் கவியரசர் கண்ணதாசன் அவர்களைப் பெருமைப்படுத்த வேண்டும் என்பதற்காக 55 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மணிமண்டபத்தை 21.10.1992 அன்று தமது திருக்கரத்தால் திறந்து வைத்தார்கள். அதுமாத்திரமல்ல; அங்கே மார்பளவு சிலையை வைக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்கள். அவ்வாறு உத்தரவிட்டதற்கு இணங்க சிலை இன்றைக்கு தயார் நிலையில் உள்ளது. அதுமாத்திரமல்ல; ஆண்டுதோறும் கவியரசர் கண்ணதாசன் அவர்களுடைய பிறந்தநாள் விழாவை மாநில அளவில் காரைக்குடியில் கொண்டாட வேண்டும் என்றும் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே எதிரொலி இருப்பதாகச் சுட்டிக்காட்டினார்கள். அது உண்மையாக இருக்குமானால் அதனை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவியரசர் கண்ணதாசன் அவர்கள் காரைக்குடியிலே பிறந்திருந்தாலும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் சென்னையில்தான் வாழ்ந்து வந்தார்கள். புரட்சித் தலைவரின் ஆட்சிக் காலத்தில் அரசவைக்கவிஞர் என்ற பட்டம் பெற்றவர் கவியரசு அவர்கள். எனவே, அவருக்கு சென்னைமாநகரில் சிலை நிறுவப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவியரசர் கண்ணதாசன் அவர்களைப் பெருமைப்

1994 ஏப்ரல் 18]

படுத்துகிற வகையில் அவருடைய சொந்த மாவட்டத்தில் அவருடைய சொந்த ஊரிலே ஒரு மணிமண்டபம், ரூபாய் 55 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே சிலையும் அமைக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 295, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

295–

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களுக்காக ஒருங்கிணைப்புக் குழு அமைத்தல்.

***22169–டாக்டர் அ. ஸ்ரீதரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய அத்தியாவசியமான தேவைகளை நிறைவேற்றும்வகையில் அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து ஒருங்கிணைப்புக் குழு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய அடிப்படைத் தேவைகளையும் அவர்களுடைய நிதிச் சலுகைகளையும் அவ்வப்போது தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கான அதிகாரிகள் சரிவரச் செய்கிறார்களா, தொழிலாளர் நலத்துறை அவ்வப்போது அவர்களுடைய பணியை மேற்பார்வை செய்கிறதா, அப்படிச் செய்கிறபோது சிறப்பாகப் பணியாற்றுகிற தொழிலாளர்கள், ஆய்வாளர்கள் போன்ற அதிகாரிகளுக்குப் பாராட்டுக்கள் வழங்கப்படுகின்றனவா, சரியாகப் பணியாற்றாமல் இருக்கக்கூடிய அதிகாரிகள் குறித்து பொது மக்களோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்களோ அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பிரச்சினையைக் கொண்டு வந்தால் நன்கு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.